
www.tamilarangam.net



தோற்றம் :

06-06-1961

மறைவு :

11-01-1987

பாசிச ஜே. ஆரின் மறு உருவமான
பிரபாகரனின் கொலை வெறிக்கு
தமிழீழ மக்கள் விடுதலைக்
கழகத்தின் தள இராணுவ தளபதி

# தோழர் மெண்டிஸ்

# பலி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தள இராணுவத் தளபதியாக இருந்த தோழர் மெண்டிஸ் பாசிச வெறியன் புலி பிரபாகரனால் 11-1-87 அன்று கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

தோழர் மெண்டிஸ் ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக தானும், தனது கடமையைச் செய்யவேண்டுமென்று புறப்பட்டு அதற்கான சரியான அமைப்பு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தான் என்று இதில் தன்னை இணைத்துக் கொண்டார். ஆரம்பத்தில தமிழீழக் காடுகளில் இராணுவப் பயிற்சி பெற்று சிறந்த இராணுவ வீரனாக திகழ்ந்தார். இவர் இராணுவப் பயிற்சி மட்டுமின்றி எமது மக்களை உண்மையான விடுதலைக்கு இட்டுச் செல்லக்கூடிய விதத்தில் அரசியல் ரீதியிலும் தன்னை வளர்த்துக் கொண்ட ஒரு தோழர். கழகத்தின் பயிற்சி முகாம் ஒன்றுக்கு பொறுப்பாளராக இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்களுக்கு இராணுவப் பயிற்சியை அளித்ததோடு மட்டுமல்லாமல் எமது மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் பற்றிய அரசியல் அறிவையும் புகட்டினார். இவரின் கீழ் நேரடியாக பயிற்சி முகாமிலே இருந்த தோழர்கள் பொறுப்பு மிகுந்த முன்னணித் தோழர்களாக இன்று திகழ்வதும் குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் தளத்தில் யாழ் மாவட்ட இராணுவப் பொறுப்பாளராகவும் பின்னர் கழகத்தின் தள இராணுவப் பொறுப்பாளராகவும் பணி புரிந்தவர் மெண்டிஸ்.

தளத்தில் இருந்த காலத்தில் சிறீலங்கா இராணுவத்துடன் நேரடி மோதல் பலவற்றில் ஈடுபட்டு விழுப்புண் தாங்கிய மறவன் எமது மெண்டிஸ். விடுதலைப் புலிகள் உட்பட ஏனைய இயக்கங்கள் அனைத்துடனும் மிக நெருங்கிய தோழமை உறவை வளர்த்தும் பேணியும் வந்த அவரை எல்லா விடுதலைப் போராளிகளும்



அன்புடன் 'சின்னமெண்டிஸ்' என்று அழைப்பர். பல்வேறு சந்தர்ப்பங்களிலும் தோன்றிய கடும் இயக்க முரண்பாடுகளை தனது நட்பின் மூலமாக சுமூகமாக தீர்ப்பதில் மெண்டிசின் மதி நுட்பமும் பொறுமையும் மக்களால் பாராட்டப்பட்டுள்ளது.

அரியாலையில் விடுதலைப் புலிகளால் எமது தோழர் இரவிமூர்த்தி, பண்டா ஆகிய இரு தோழர்கள் கொல்லப்பட்ட போது எமது தோழர்கள் ஆத்திரமடைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முயன்ற போதும் இயக்கங்களுக்கிடையே மோதல் உருவாகினால் சிறீலங்கா அரசுக்குத் தான் நன்மை பயக்கும் என்றும் நாம் என்ன நோக்கத்திற்காக ஆயுதம் எடுத்தோமோ அந்நோக்கத்தை புதைத்து விடவேண்டிய நிலை ஏற்படும் என்றும் சக தோழர்களைக் கண்டித்து அவ்வாறான செயல்களைத் தடுத்தார். அப்படியான நெருக்கடிக் கட்டத்திலும் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்களை சந்தித்துப் பேசி அவர்கள் தவறை விமர்சனம் செய்து பாரிய மோதல் ஒன்றைத் தவிர்த்தார்.

1985 நடுப்பகுதியில் ரெலோவின் தள பொறுப்பாளர்களில் ஒருவரான தாஸ் என்பவர் புலிகளின் மீது கடும் தாக்குதலை மேற்கொண்ட போது அம்மோதலினால் விடுதலைக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளை எடுத்துக் கூறி தாக்குதலை நிறுத்துவதற்கு ஆவன செய்தார். சமாதான முயற்சிகளில் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய ஈழ தேசிய விடுதலை முன்னணியே (ENLF) தயங்கிக் கொண்டிருந்த வேளையில் மெண்டிஸ் தாமதிக்காது தகுந்த நடவடிக்கை எடுத்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1986 மே மாதத்தில் ஈழ தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் அம்முன்னணியின் இன்னொரு இயக்கமான ரெலோ மீது கொலை வெறித் தாக்குதல் ஒன்றை மேற் கொண்டன. இத்தாக்குதல் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தோழர் மெண்டிஸ் விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு மற்றும் திலீபன் போன்றோரைச் சந்தித்து படுகொலையை நிறுத்தும்படியும் மக்கள் தமிழீழப் போராட்டத்தை வெறுக்கும் நிலை ஏற்படுவதும் தவிர்க்கப்பட வேண்டும் எனவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டார். ஆனால் கிட்டு, திலீபன் போன்றோர் எம்மீது குற்றம் இல்லை இது மேலிடத்து உத்தரவு அதைத்தான் நாம் செய்கிறோம் எனக் கூறி சமாதானத்தையும் மனிதாபிமானத்தையும் குழி தோண்டிப் புதைத்து விட்டு தம் படு கொலையைத் தொடர்ந்தனர். இந்நிலையில் ரெலோ இயக்கத்தின் 200 க்கும் மேற்பட்ட தோழர்களை கொலை வெறியர்கள் தெருக்களிலே படு கொலை செய்து எரித்து சிங்கள இராணுவத்தை விட கேவலமான முறையில் தமது கொலைவெறியை நடத்திக் கொண்டிருந்தனர். ரெலோ இயக்கத்தின் தலைவர் சிறீசபாரத்தினம் உட்பட பலர் தலைமறைவாகியிருந்தனர். புலிகளின் கொலை வெறியை தடுக்க முடியாத நிலையில் ரெலோ இயக்கத் தோழர்களைக் காப்பாற்றினால் கழகத்திற்கும் (PLOT) புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்படும் என்று தெரிந்தும் தலைமறைவாக இருந்த (மறைந்த) ரெலோ தலைவர் சிறீசபாரத்தினத்துடன் தொடர்பு கொண்டு தகவல் அனுப்பினார். ரெலோ தலைவரோ தங்களுடன் இணைந்திருந்த ஈழ தேச விடுதலை முன்னணியைச் சேர்ந்த சக இயக்கங்களுக்கு தகவல் கொடுத்து விட்டு காத்திருந்தார். ஆனால் சக இயக்கங்களாலே சிறீசபாரத்தினத்தை காப்பாற்ற முடியவில்லை. இந்நிலையில்சிறீசபாரத்தினத்துடன் தலைமறைவாகி இருந்து அக்கொலை வெறியர்களிடமிருந்து தப்பிய ரெலோ முன்னணித் தோழர்களை தோழர் மெண்டிஸ் பொறுப்பெடுத்து தமிழகத்திற்கு பாதுகாப்பாக அனுப்பி வைத்தார்.

நான்கு வருடத்திற்கு மேலாக தமிழீழம் செல்லாமல் தமிழகத்திலேயே மறைந்து வாழ்ந்து கொண்டிருந்த பிரபாகரன் இன்று தனது இயக்கத்தினுள் தோன்றியுள்ள முரண்பாடுகளை தமிழகத்தில் இருந்து கொண்டு தீர்க்கமுடியாத நிலையில் தமது பதவியை காப்பாற்றிக் கொள்ள தமிழீழம் செல்வேண்டியதாயிற்று. தன் இனத்தின் குருதி படிந்த கையோடும் கபட நெஞ்சோடும் அங்கு செல்லும் பிரபாகரனுக்கு மெண்டிஸ் போன்ற நல்ல சக்திகள் இன்றும் மக்கள் பலத்துடனும் செல்வாக்குடனும் செயல்பட்டுக்கொண்டிருந்தது பொறுக்க முடியவில்லை. எனினும் மெண்டிசை நேரடி மோதலில் கொலை செய்வது என்பது மக்கள் மத்தியில் சாதகமற்ற ஒரு விடயமென புலிகளின் தளபதியான கிட்டு கருதியதாலும். தோழர் மெண்டிஸ் விடுதலைக்கு விசுவாசமாக நீண்ட காலம் மக்கள் மத்தியில் செயல்பட்ட ஒரு வீரம் மிக்க போராளி என்ற கருத்து விடுதலைப்புலிகள் சிலரின் மத்தியிலேயே நிலவியதாலும், தோழர் மெண்டிசை சுமுகமான பேச்சுவார்த்தைகள் என்ற போர்வையில் நிராயுதபாணியாக அழைத்து நயவஞ்சகமாக விடுதலைப் புலிகள் கைது செய்து சித்திரவதை செய்தனர். ஆனால் அதே வேளை மெண்டிசுக்கும் தங்களுக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை என வெளியுலகிற்கு கூறி வந்தனர்.

தம்முடைய சுயநலம் கருதி கழகத்திலிருந்து வெளியேறிய ஈஸ்வரன்; ராஜன் போன்ற துரோகக் கும்பல்கள் தமிழகத்திலும் பிற நாடுகளிலும் கழகத்தை இழிவுபடுத்தும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்ட நிலையிலும் இந்தியாவில் பல ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்ட நிலையிலும், மக்கள் பாதுகாப்பிற்கான பரவலான நடவடிக்கைகளையும், கழகத்தின் கட்டுக்கோப்பை பாதுகாத்தலையும் சீராக செயல்படுத்திய தோழர் மெண்டிசின் திறமையிலும் இலட்சிய வேட்கையிலும் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் மதிப்பும் தமிழீழத்திலுள்ள புலிகளுக்கு நன்கு புரிந்த விடையம். இதனால் அவர்கள் மெண்டிசை கொலை செய்யும் படி பிரபாகரன் இட்ட கட்டளையை நிறைவேற்றாமலே இருந்தனர். இன்று பிரபாகரனே நேரில் தமிழீழம் சென்று, எம் இனிய தோழன் மெண்டிசின் குருதி தனது கொலைக் கரங்களில் காயு முன்னர் இனவெறியன் ஜே. ஆருடன் இரகசிய பேச்சு நடத்த ஒழுங்கு செய்கின்றான். தன் பதவிக்காக எவ்விதமான ஈனச் செயலையும் செய்யத் தயங்காத பிரபாகரனின் கொலைவெறி மெண்டிஸ் போன்ற போராளிகளின் புனித இலட்சியங்களை கேவலப்படுத்தும் நீசத்தனம் அழியும் நாள் நெருங்குகின்றது.

கழகத்திலிருந்து வெளியேறி தம்மால் சுயமாக விடுதலைப் பாதையில் ஏதும் சாதிக்க முடியாத நிலையில் கழகத்தை குழப்பி நாசமாசக்கும வக்கிர புத்தியுடன் செயல்பட்டு வந்த அரசியல் மனநோயாளிகளான ராஜன், ஈஸ்வரன் ஆகியோரின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழப்பவாத திட்டங்களுக்கு மெண்டிஸ் பெரும் முட்டுக்கட்டை
யாக இருந்தார். தமிழகத்தில் இவர்கள் விளைவித்த அனர்த்தனங்
கள் எவையுமே தமிழீழத்தில் கழகத்தின் கட்டுக்கோப்பை
குலைக்காதவாறு மெண்டிசால் பேணப்பட்டது. இதனால்
மெண்டிஸ் மீது ஆத்திரமுற்ற சந்தர்ப்பவாதிகளான ஈஸ்வரன்
கும்பல் எழுதிய கடிதத்தினூடாக, பலமுக்கிய ரெலோ தோழர்
கள் மெண்டிசினால் காப்பாற்றப்பட்டு தமிழகம் அனுப்பப்
பட்டமை விடுதலைப் புலிகளுக்கு நிரூபணமானது. மேலும்
மெண்டிசின் பொறுப்பிலே ரெலோவின் ஆயுதங்கள் பாதுகாக்கப்
பட்டுள்ளது என்ற தவறான செய்தியும் கடிதத்தில் காணப்
பட்டது. இக்கடிதத்தை சாட்டாக கொண்டே மெண்டிசின் விரல்
நகங்கள் பிய்த்தெடுக்கப்பட்டு சித்திரவதை மேற்கொள்ளப்
பட்டது. தோழர் மெண்டிசின் பெயரையும் கழகத்தையும் நேரடி
யாக களங்கப்படுத்தமுடியாத நிலையில் ஈஸ்வரன் கும்பலின்
ஓரிரு நபர்களினூடாக யாழ்குடா நாட்டில் சில கீழ்தரமான
பிரச்சாரங்களை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் முயற்சி
செய்து தோல்வி கண்டதும் யாவரும் அறிந்ததே. தளத்தில்
புலிகளுக்கும் ஈஸ்வரன் கும்பலுக்கும் பெரும் முட்டுக் கட்டை
யாக இருந்த மெண்டிசையும் பின்தளத்தில் செயலதிபர் தோழர்
உமாமகேஸ்வரன், தோழர்கள் கண்ணன், வாசுதேவன்
ஆகியோரையும் இன்னும் சிலரையும் கொலை செய்ய உதவி
கோரி ஈஸ்வரன் குழுவினர் விடுதலைப் புலிகளை சென்னை
யிலும் மதுரையிலும் சந்தித்து பேசியதும் விடுதலைப் புலிகளுக்கு
சாதகமாக அமைந்தது. கழகத்தின் செயற்பாடுகளை சீர்படுத்தி
சரியான பாதையில் நெறிப்படுத்த வேண்டும் என்று கழகத்தின்
தளமகாநாட்டைமெண்டிஸ்முன்னின்றுநடத்தியதன்நோக்கத்தை
ஈஸ்வரன் கும்பல் சிதறடிக்க முனைகின்றனர். விடுதலைப் புலி
கள் இந்த துரோகிகளோடு சேர்ந்து ஈடுபட்ட சதிச் செயல்களும்
இதனால் தமிழீழப் போராட்டத்தில் ஏற்படக்கூடிய
பின்னடைவுகளையும் அத்துடன் யாழ்மாவட்டத்தில் அன்று
எமது முகாம்களில் தங்கி இருந்த கிழக்கு மாகாணத்தை சேர்ந்த
300க்கும் மேற்பட்ட கழகத் தோழர்களுக்கு ஒரு பயனற்ற
மோதலினால் ஏற்படக்கூடிய உயிர்ச் சேதத்தையும் அதனால்
ஏற்படும் பிரதேச கசப்புணர்வுகளையும் கருதி தளத்தில் எமது



இராணுவரீதியான பாதுகாப்பு நடவடிக்கைகளை தந்திரோபாய
மாகவும் தற்காலிகமாகவும் மெண்டிஸ் இடைநிறுத்தினார். குழப்ப
வாதிகளினதும் புலிகளினதும் நீசத்தனமான நோக்கங்கள்
இதனால் முறியடிக்கப்பட்டன.

கிழக்கு மாகாண மக்களின் நலன்களுக்காக குரல் எழுப்பு
கின்றோம் என கபட நாடகமாடும். ஈஸ்வரன் போன்றோர்
தமிழகத்தில் சொகுசாக வாழ்ந்து கொண்டு கீழ்தரமான
அரசியலில் ஈடுபட்டு நாட்களைப் போக்கிய வேளையில் புலி
களின் அச்சுறுத்தலின் மத்தியிலும் தளத்தில் அஞ்சாது நின்று
கிழக்கு மாகாணத் தோழர்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படாமல்
இருப்பதை உறுதிசெய்து தொடர்ந்தும் செயலாற்றினார்.

இந்தியாவில்இருந்துகொண்டு இந்திய உபகண்டத்திற்கு அபா
யத்தை ஏற்படுத்த துடிக்கும் சர்வதேச பிற்போக்கு சக்திகளுடன்
கூட்டுவைத்துக்கொண்டு தனது எஜமானர்களான ஏகாதிபத்திய
சியோனிசவாதிகளின் ஆலோசனைகளையும் உதவிகளையும்
பெற்று வரும் பாசிச வெறிகொண்ட பிரபாகரன் ஜே. ஆருடன்
செய்துகொள்ள முயலும் கூட்டை துரிதப்படுத்த, தனது
எஜமானர்களின் எதிரிகளாக விளங்கும் எம்மையும் ஈ. பி. ஆர்.
எல். எவ். ஐயும் முற்று முழுதாக அழிப்பதையேதனது குறிக்
கோளாக கொண்டு இயங்கினார். ஏற்கனவே எமது கழக செயற்
பாடுகளை நிறுத்திவைத்து நிராயுதபாணிகளாக நின்ற சூழ்
நிலையில் தோழர் மெண்டிசை பேச்சுவார்த்தைக்கென அழைத்து
கைதுசெய்தனர். தங்களது பிரதான எதிரிகளை நிராயுத
பாணிகளாக்கி விட்டோம் என்ற துணிவில் ஈ. பி. ஆர். எல். எவ்
உடன் மோதி சிலரை கைதுசெய்தனர். தனது எஜமானர்களின்
ஆலோசனைப்படி இவர்களை கைது செய்தால் போதாது
அழிக்கப்படவேண்டும். இல்லையேல் இவர்களால் எப்போ
தாவது தனக்கு ஆபத்து ஏற்படலாம் என்றெண்ணி தோழர்
மெண்டிசை படுகொலை செய்தார். அத்துடன் நிற்காது ஏனைய
பகுதிகளில் கைது செய்யப்பட்ட சகஇயக்கத் தோழர்களையும்
படுகொலை செய்ய கொலைவெறிக் கூட்டாளிகளுக்கு கட்டளை
யிட்டதாகவும் அறிகின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு நசுக்கப்பட்டதுடன் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டு வந்ததால்தான் நாம் தமிழீழக் கோரிக்கையை முன் வைத்து ஆயுதம் ஏந்தி அடக்குமுறையாளர்களுக்கு எதிராக போராட வந்தோம். ஆனால், இன்று எவ் அடக்குமுறைகளையும் படுகொலைகளையும் சிறீலங்கா ஆளும் வர்க்கம் செய்து வந்ததோ, அதைவிடப் படுமோசமான முறையில் தன்னையும் தமிழ் மக்களின் விடிவுக்காக போராடும் இயக்கம் என கூறிக் கொள்ளும் பாசிச வெறிகொண்ட விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை பார்க்கும்போது இவர்கள் யாருக்கெதிராக துப்பாக்கி தூக்கினார்கள்? எமது எதிரிகள் யார்? என்பவற்றை நாம் சிந்திக்கவேண்டியவர்களாய் உள்ளோம்.

தமிழக மக்களே !

நீங்கள் இதுவரை எமக்கும் சக இயக்கங்களுக்கும் தமிழீழ மக்கள் அனைவருக்கும் காட்டிய ஆதரவை நாம் என்றும் மறவோம். ஆனால் உங்கள் ஆதரவைப் பெற்று தம்மை வளர்த்துக்கொண்ட விடுதலைப் புலிகள் இன்று தமிழீழத்தில் சக போராளிகளை படுகொலை செய்யும் பாசிச வெறித்தனத்தை புரிந்து கொள்ளுங்கள். தமிழீழத்தில் புலிகள் இராணுவ ஆட்சியை உருவாக்க முன்னரே மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுவதை பார்க்கும்போது தமிழீழத்தில் அவர்களது நோக்கம் நிறைவேறினால் இவ்வளவு காலமும் தமிழ் எந்த மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு வந்ததோ, அவர்களுக்காக அனுதாபமும் அன்பும் பரிவும் காட்டினீர்களோ அதே மக்கள் தற்போதுள்ளதை விட படுமோசமான நிலைக்கு தள்ளப்படுவார்களே என்று நீங்கள் சிந்திக்கவில்லையா?

புலிகளின் தலைவர் பிரபாகரன் ஏகாதிபத்திய சியோனிச வாதிகளின் ஆலோசனையின்படி செயல்படுவதால் தற்செயலாக இவரது ஆட்சி தமிழீழத்தில் உருவாகினால் ஏகாதிபத்திய சியோனிசவாதிகளான தனது எஜமானர்களுக்கு துணையாக இந்திய உபகண்டத்திலே குழப்பங்களை உருவாக்க மாட்டாரா? என்று சிந்திக்கவில்லையா? நீங்கள் இதுவரை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு கொடுத்து வந்திருந்தால் அவர்களிடம் இக் கொலைகள்பற்றி தட்டி கேளுங்கள்.

தமிழக பத்திரிகைகளே !

விடுதலைப் புலிகளின் கொடூரமான செயல்களை தமிழக மக்களுக்கு அம்பலப் படுத்துங்கள். தமிழகத்தில் அடைக்கலம் புகுந்துள்ள தமிழீழ மக்களே உங்கள் ஆதரவுகளை எமது மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக போராடுகின்ற முற்போக்கு சக்திகளுக்கு வழங்குங்கள். நீங்கள் விடுதலைப் புலிகளுக்கு கொடுக்கும் இன்றைய ஆதரவு நாளை உங்கள் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படவே செய்யும் என்பதை மறவாதீர்கள்.

தோழமை இயக்கங்களே

தமிழீழ மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மீட்கப் படவேண்டும் என்ற எண்ணம் கொண்டு செயல்படும் சக தோழமை இயக்கங்களே, இந்நேரத்திலாவது எமது வேறுபாடு களை மறந்து எமது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமை களை மீட்டிடவும் பிரபாகரனினதும் ஜே. ஆரினதும் கூட்டுச் சதித்திட்டமான இராணுவ ஆட்சிமுறைத்திட்டத்தை முறியடித் திடவும், இவர்களுக்கூடாக செயற்படத்துடிக்கும் ஏகாதிபத்திய சியோனிசவாதிகளின் திட்டமான இந்துமா சமுத்திரத்திலும் இந் திய உபகண்டத்திலும் தமது ஆதிக்கத்தை செலுத்த முயல்வதை எதிர்த்து போராடவும் நாம் எமது முரண்பாடுகளை களைந்து ஐக்கியப்படுவோம். கடந்த காலம் போன்று எமது ஐக்கியமும் ஒருமைப்பாடும் தாமதிக்குமானால் நாம், எம்மைமட்டுமன்றி எம்மை நம்பிய மக்களுக்கும் துரோகம் செய்தவர்களாகவே கருதப்படுவோம்.

புலிகளே!

1985-ல் நீங்கள் யாழ் வர்த்தகர்கள் பலரைக் கடத்தி இரகசி யமாக பணம் பறித்துக் கொண்டிருந்த போது அதை துப்பு துலக்கிய எமது தோழர்கள் உங்கள் வன்னி பிராந்திய தளபதி மாத்தையா உட்பட சிலரை கையும் களவுமாக உரும்பிராய் என்னும் இடத்தில் வாகனத்துடன் கைது செய்து மரண தண்டனை வழங்க முற்பட்டனர். இறுதி நேரத்தில் தோழர். மெண்டிஸ் தலையிட்டு அவர்களை எச்சரிக்கை செய்து விடுதலை செய்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டக்களப்பில் உங்களது கிழக்கு பிராந்திய தளபதியாக முன்னர் இருந்த பசீர்காக்காவை எமது தோழர்கள் கைது செய்து மரணதண்டனை வழங்க முற்பட்டபோது தோழர். மென்டிஸ் தொலைத் தொடர்பு மூலம் தடுத்து நிறுத்தினார்.

இது போன்ற சந்தர்ப்பங்களில் அதிகார துஷ்பிரயோகம், கொலை வெறித் தற்பெருமை, அதிகாரமமதை போன்ற வற்றுக்கு பலியாகாமல் மக்களின் நலனையும், சக போராளி களின் உயிரின் பெறுமதியையும் உணர்ந்து செயல்பட்ட மென்டீசுக்கு கபட நயவஞ்சகம் தானா நீங்கள் கொடுத்த பரிசு.

தோழர்களே !

தாமே முற்போக்கானவர்கள் எனப்பிதற்றிய கோழைகளின் கூட்டம், இன்று சழத்தின் காடுகளிலும் அகதிகள் முகாம்களிலும் களிலும் நாதியற்று வாழும் ஏழைஅகதிகளின் பெயரைச் சொல்லி வெளி நாட்டில் உல்லாசமாய் வாழ்கின்றனர். ஆனல் வலதுசாரி கொலைக்காரக் கும்பலுக்கு ஒருசவாலாய் தான்பிறந்த மண்ணோடும் தான் நேசித்த மக்களோடும் வாழ்ந்து இலட்சியக் கனலாய் வீரமரணம் அடைந்தான் எங்கள் மென்டிஸ். அவன் நேசித்த மண்ணில் அவன் சிந்திய இரத்தம் இலட்சிய ஊற்றாய் எமக்கு உரமூட்டும்.

செய்தி மக்கள் தொடர்பு திணைக்களம்
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்
14 – 01 – 1987

# எங்கள் உயிரைக் காக்க தன்னுயிரைப் பலி கொடுத்த உத்தமன்

விடுதலை! சுதந்திரம்! சமத்துவம் சகோதரத்துவம்! நீதி! சமாதானம்

இவற்றிற்காக குரல் கொடுத்து அதன் பரிணாம வளர்ச்சியின் விளைவுதான் தனிநாட்டுப் போராட்டம்- இளைஞர் அணிகளின் இயக்கத் தோற்றம்.

ஸ்ரீலங்கா அரசால் பிடிபட்டு சித்திரவதைக்குள் ளாகி அடைபட்டு அடிமையாய் வாழ்வதைவிட அன்னை யின் அடிமை விலங்கை தகர்த்தெறியப் போராடி உயிர் நீப்பதே மேல் எனப்புறப்பட்ட வீரமிகு தோழர் களில் "மென்டிஸ்" என தோழர்களால் அழைக்கப் பட்ட அரியராஜசிங்கம் விஜயபாலனும் ஒருவன். இன்று அவன்

எம்முடன் இல்லை ஆம்

13-12-86 ல் விடுதலைப்புலிகளால் அவனது இல்லத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட அவன் 11-1-1987 ல் அழித்து விட்டோம் என பெற்றோருக்கு

தகவல் கொடுத்துள்ளனர் கொண்டு சென்ற கொடும் பாவிகள் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (P L O T) தமிழீழத் தளபதி பதவியில் பல

சோதனைகளின் மத்தியிலும் தொடர்ந்து இருந்து இயக்கங்களுடனன பிரச்சனை ஆனலும் கழகத்துள் பிரச்சனைகள் என்றாலும் அமைதியுடன் விளம்பரம் இன்றி சமாதானமாகத் தீர்த்த அந்த தளபதித் தோழன் செய்த குற்றம் என்ன?

அடம்பனில் செத்தவர்கள் அன்னியர்கள் ஆனலும் மனிதாபிமானம் காக்கும் நாம் இறந்தவர் உடல் களை உரியவர்களிடம் கொடுக்கிறோம் என்று கூறிய வர்கள் "மென்டிஸின் உடலை" என்ன செய் தார்கள்?

சாம்பலைத்தான் என்ன செய்தார்கள்? உயிர் விட்ட உடல் உண்மையைக் கூறி உலகத்தவர் கண்களைத் திறக்கச் செய்து விடும் என்ற பயமா?

அவன் சாம்பல் சர்வாதிகாரிகளுக்குச் சாவு மணி அடித்து விடும் என்ற அதிர்வா?

நீங்கள் வேண்டுமானல் ஆளுங்கள் – எங்கோ வாழவிடுங் கள் என்ற நிலையில் உள்ள மக்களே விடுதலைப் போராளி மென்டிஸின் மரணத்திற்கு காரணம் கேளுங்கள்

எமது தோழனே உனக்கு எமது இரத்த அஞ்சலி.

நண்பர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதைந்த மலருக்குப் புரட்சிவணக்கம்

மக்கள் மந்தியில்
மணம் வீசிக் கொண்டிருந்த
மலரொன்று,
கண்ணில் மண்ணாவும்
கயவர்களால்
மண்ணில் புதைக்கப்பட்டு விட்டது.

சமுதாய மக்களுக்கு
சரியாசனம் வேண்டுமென்ற
சமதர்மப் புறா ஒன்று,
அரியாசனம் ஏறவந்த
துப்பாக்கிகளால்
அழிக்கப் பட்டிருக்கிறது.

தோழமைப் புறாக்களின்
உள்ளத்து வானிலே
உயரப் பறந்த
வெள்ளைப் புறா ஒன்றின் சிறகு
சில வெறியர்களால்
வெட்டப் பட்டுவிட்டது.

கை கலப்புக்களை- தன்
கருத்து வலிமையினால்
களைந் தெறிந்த நா வொன்று,
ஆதிக்க வெறியர்களால்
அறுக்கப் பட்டுவிட்டது.

இயந்திரங்களுக்கே
இதயம் பிறக்கும்- இந்த நாளில்
பதவி வெறியினால்
இவர்கள்- இதயங்களை இழந்தார்கள்.
அதனால்,
மனிதத் தோலின்
உணர்வுகளை
மறந்து போய் விட்டார்கள்.



பலி எடுத்துப்
பதவியைப் பிடிப்பது,
இவர்களுக்குப்
பழகிப் போன வழி.

எருமைத் தோலுக்கு
மழை நீரு மொன்றுதான்...
விழி நீரு மொன்றுதான்...

இனிமேலும் இவர்களிடம்
இதயத்தை எதிர்பார்த்தால்
இருப்பின் உறுதியை
இழப்பது நாங்கள்தான்.

தோழா மெண்டில்
நாய்களின் பிணங்களையே
வீசியெறியாது,
நல்லூர் தெருவொன்றில்
உனது சிதைந்த உடலும்
சிந்திய இரத்தமும்
உறைந்தது கண்டு
பூமகள்நெஞ்சே புழுங்கிவெந்தது.

உனது விழிகள்
பொது எதிரி மீது பாய்ந்தபோது,
துரோகிகளின் துப்பாக்கி
உன்பக்கம் திரும்பியது.

உதிரத்தை ஊற்றி,
உழைத்து, வளர்த்த
கொள்கைகளை- என்றும்
கொலைஞர்களால் அழிக்கமுடியாது.

ஓரடி அழிந்தால்.... நூறடியாகும்.
நீ ஏறிய படிகளில்தான்
எமது பாதங்களும் பதியும்.

# மயானத்து மலர்களே அழைத்துவாரீரோ

அன்று "அவர்கள்" உனை அழைத்தபோது ஆண்மையுடன், சென்றாய் நீ!
ஆவலுடன் தேடி வந்தபோது அமைதியுடன் புன்னகை தந்தாய் நீ!
உன்கண்கள் கலங்கவில்லை, உள்ளமுமே தளரவில்லை.
மீண்டும் நேற்று "அவர்கள்" வந்தபோது நீயும் கூட வரவில்லை,
ஆவியைப் பிரிந்து விட்டோம் எனச் சொல்லி விடவே "அவர்கள்" வந்தனராம்'
உள்ளம் பதைத்தது: உணர்வும் குன்றியது. ஐயகோ
ஊரெல்லாம் உன்னிடத்தில் துயருரைத்த காலமொன்றுண்டு
காலம் கனிந்து வர காரியமும் கைகூடும். என்றுரைப்பாய் நீ!
இன்று காலனுனைக் கவர்ந்து விட்டானும் மெய்தானோ! நீயே சொல்
ஊரில் சின்னஞ்சிறு குழந்தைக்கெல்லாம் நீ மெண்டிஸ் அண்ணா
நம்மெல்லோருக்குமோ நீ விஜயபாலனேதான்,
பாலா இனி யெங்கே உன்னைக்காண்போம்! உன்திருமேனியை எவ்விடத்தில் தேடுவோம்!
சாம்பல் பூத்த மயானத்து மலர்களே!
எங்கள் பாலனைக் கண்டால் அழைத்து வாரீரோ?

உன் பிரிவால்வாடும்
பெற்றோரும், உற்றோரும்.

Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT) BM BOX 7313, LONDON WC1 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்